சுருக்கம்

பால்வளம் – தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு – கருணை ஓய்வூதியம் மற்றும் குடும்ப கருணை ஓய்வூதியம் உயர்த்தி வழங்கவும் மற்றும் ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியாக ரூ.50,000/– வழங்கவும் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (பா.உ .2) துறை

அரசாணை (நிலை) எண்: 84

நாள்: 10.07.2023
சோபகிருது, ஆனி – 25
திருவள்ளுவர் ஆண்டு 2054
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.186, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(பா.உ_2)துறை, நாள்.16.12.2016.
2. அரசாணை (நிலை) எண்.174, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(பா.உ_2)துறை, நாள்.28.11.2019.
3. அரசாணை எண்.164, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.07.07.2021.
4. ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களின் கடித ந.க.எண்.6816/என்.3/2023, நாள்.27.04.2023.

*****

ஆணை:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் 05.04.2023 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) தொடர்பாக வெளியிடப்பட்ட 2023–2024–ஆம் ஆண்டிற்கான இதர பிற அறிவிப்புகளுடன் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது :–

அறிவிப்பு எண்: 11

"ஆவின் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதி உருவாக்கப்படும்.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

i. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து 16.11.1995 முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கீழே (iv) க்கு உட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.3,500/– கருணை ஓய்வூதியம் வழங்குதல்.

(த.பி.பா)

ii. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து 16.11.1995 முதல் ஓய்வு பெற்ற/ மரணமடைந்த பணியாளர்களின் சட்ட பூர்வ வாரிசுதாரர்களுக்கு, கீழே (iv)க்கு உட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.1,750/- கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்.

iii. ஓய்வூதிய திட்டம், 1995 கீழ் வழங்கும் ஓய்வூதியத்திற்கு கூடுதலாக கருணை ஓய்வூதியம் அல்லது கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்.

iv. 01.04.2003 அன்று அல்லது அதற்கு பிறகு, பணியில் நியமிக்கப்பட்ட மற்றும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்கள்.

v. கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து ஒரு தனி மூலதன நிதி பங்களிப்பிலிருந்து வழங்கப்படும்.

vi. மாதாந்திர கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்க போதுமான தனி மூலதன நிதி உருவாக்கும் வரை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தங்களது பொது நிதியிலிருந்து வழங்குதல்.

vii. கருணை ஓய்வூதியம் செயல்படுத்துவதற்கு தேவையான ஒழுங்கு முறை வடிவமைக்கலாம்.

viii. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களிலிருந்து தீர்மானம் பெறப்பட வேண்டும்.

ix. அரசு நிதி ஒதுக்கப்படாது.

x. தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உரிய நடைமுறைப்படி பின்பற்ற வேண்டும்.

xi. கருணை ஓய்வூதியம் இந்த அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அமுலுக்கு வரும். மேலும், இந்த அரசாணையில் இணைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் பின்பற்ற பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கூறிய, அரசாணைக்கிணங்க, கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 16.12.2016 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

Scanned with CamScanner

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் வழங்கப்பட்டு வந்த கருணை ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.3,500/-லிருந்து ரூ.4,000/- ஆக உயர்த்தியும் கருணை குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,750/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த கருணை ஓய்வூதிய உயர்வு 28.11.2019 அன்று முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது.

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் படி அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்பு நிதிக்கு, ஓய்வூதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/- விதம் பங்களிப்பு பிடித்தம் செய்து, அவர்கள் இறந்தால் அவரது குடும்பத்திற்கு ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

5. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்கள் தற்போது, பல்வேறு ஓய்வுபெற்ற பணியாளர் நலச்சங்கங்கள் கருணை ஓய்வூதியத்தினையும் கருணை குடும்ப ஓய்வூதியத்தினையும் உயர்த்தி வழங்க கோரிக்கை வைத்துள்ளனர் என்றும் இது தவிர, ஓய்வு பெற்ற பணியாளர் நலச்சங்கங்கள், ஓய்வு பெற்ற அரசு பணியாளர்கள் இறந்துபோனால் அவரது இறுதிகால சடங்கிற்கு ரூ.50,000/- குடும்ப பாதுகாப்பு நிதியாக வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது போன்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் நடைமுறைபடுத்திட கோரியுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 24 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 4700 ஓய்வூதியர்கள் மற்றும் 1500 குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.26.40 கோடி கருணை ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார். மேலும் மேற்கூறிய கருணை ஓய்வூதியம் வழங்க ரூ.370.00 கோடி நிதி மூலதனம் கணக்கிடப்பட்டுள்ளது என்றும் இது நாள் வரை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ரூ.188.00 கோடி சிறப்பு சேம நல நிதி மூலம் ஆயுள் காப்பீடு கழகத்தில் நிதி மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் இந்த மூலதனம் செலுத்துவதற்கு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு தங்கள் விற்பனை முதலில் ஒரு சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் கருணை ஓய்வூதியத்தினை குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/-லிருந்து ரூ.4,500/- ஆக உயர்த்தியும், கருணை குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.2,250/- ஆக உயர்த்தியும் வழங்கும் பட்சத்தில் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3.30 கோடி கூடுதல் செலவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

6. ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்கள் ஓய்வு பெற்ற பணியாளர்கள் நலனை கருத்தில் கொண்டு கருணை ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/-லிருந்து ரூ.4,500/-ஆக உயர்த்தியும், கருணை குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.2,250/- ஆக

Scanned with CamScanner

உயர்த்தியும் வழங்க ஆவண செய்யுமாறும் மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கருணை ஓய்வூதியதாரர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கும் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித்திட்டம் போன்ற திட்டத்தினை செயல்படுத்தவும் மேலும் இத்திட்டத்தில் கருணை ஓய்வூதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் பிடித்தம் செய்து ஒரு தனி நிதி மூலதனம் உருவாக்கி அதிலிருந்து கருணை ஓய்வூதியர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ.50,000/- நிதி உதவி வழங்க ஆவண செய்யுமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மேலே பத்தி 6-ல் உள்ள ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கருணை ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படும் போது அதற்காக பிடித்தம் செய்யப்படும் தொகையும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு அவர்களின் நலனை கருத்தில் கொண்டு கருணை ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/-லிருந்து ரூ.4,500/-ஆக உயர்த்தியும், கருணை குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.2,250/-ஆக உயர்த்தியும், மேலும் இக்கருணை ஓய்வூதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் பிடித்தம் செய்து ஒரு தனி நிதி மூலதனம் (Corpus Fund) உருவாக்கி அதிலிருந்து கருணை ஓய்வூதியர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ.50,000/- நிதி உதவி வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வரசாணை நிதித்(கா.ப.பாவ.மீவ (ம) மீந)துறையின் அ.சா.எண்.25173/2023, நாள்.03.07.2023-ல், பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை
மேம்பாட்டுத்துறை, சென்னை-51.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,
சென்னை-35.

நகல் :
நிதித்(கா.ப.பாவ.மீவ (ம) மீந)துறை, சென்னை-09.
மாண்புமிகு அமைச்சர் (பால்வளத்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனி செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 7.2023

Scanned with CamScanner

GENERAL MANAGER (FINANCE) H.O.
TCMPF LTD.,
(ஆவின்)
11 AUG 2023

TAMILNADU CO-OP MILK PRODUCERS' FED. LTD.
MANAGING DIRECTOR
04 AUG 2023
★ NANDANAM, CHENNAI-35 ★
10480
2873



பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, ஆணையர் அலுவலகம், சென்னை51

**இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை:- மரு. சு. வினீத், இ.ஆ.ப**

**இயக்குநர்**

ந.க.எண்.6816/என்3/2023 நாள். 31.07.2023

பொருள்: பால்வளத்துறை – தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் –கருணை ஓய்வூதியம் உயர்த்தி வழங்கவும் (ம) ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியாக ரூ.50,000/- வழங்க – அரசிடம் ஆணை வேண்டுதல் சம்பந்தமாக பிரேரணை- தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 186, கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்(பா.உ.2) துறை நாள்16.12.2016:.
2. அரசாணை(நிலை)எண்.174, கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்(பா.உ.2) துறை நாள்28.11.2019;
3. அரசாணைஎண்.164, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்:.07.07.2021
4. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய கடித ந.க. எண்.18136/ப.கு.தொ.உ.1/2017 நாள்.11.08.2022.
5. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2023-24, அறிவிப்பு எண். 11 , நாள்.05.04.2023
6. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய கடித ந.க. எண்.18136/ப.கு.தொ.உ.1/2017, நாள்.11.04.2023
7. இவ்வலுவலக கடித ந.க. எண்.6816/என் 3/2023, நாள்.27.04.2023
8. அரசாணை (நிலை) எண். 84, கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்(பா.உ.2) துறை, நாள்.10.07.2023

*****

**ஆணை:-**

பார்வை 6ல் காணும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், அவர்களின் பிரேரணையில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கருணை ஓய்வூதியதாரர்களுக்கு கருணை ஓய்வூதியம், குடும்ப கருணை ஓய்வூதியம் உயர்த்தி வழங்கவும் மற்றும் பார்வை 5ல் காணும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2023-24, அறிவிப்பு எண் 11-ல், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் ஓய்வூதியர்களின் கருணை ஓய்வூதியத்தின் பங்களிப்பிலிருந்து தனி நிதி (Corpus Fund) உருவாக்கி, அதன் மூலம் கருணை ஓய்வூதியர்கள் இறந்தால், அன்னாரது குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க " ஆவின் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதி" உருவாக்கப்படும் என அறிவித்ததின் அடிப்படையில் ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியாக ரூ.50,000/- வழங்கவும் பார்வை 7ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் அரசிடம் கோரப்பட்டமைக்கு பார்வை 8ல் கண்ட அரசாணை மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் அரசாணையில், கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அவர்களின் கருத்துரு ஏற்றுக்கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

i. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து 16.11.1995 முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கீழே (iv) க்கு உட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.3500/- கருணை ஓய்வூதியம் வழங்குதல்.

ii. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து 16.11.1995 முதல் ஓய்வு பெற்ற/ மரணமடைந்த பணியாளர்களின் சட்ட பூர்வ வாரிசு தாரர்களுக்கு,

(த.பி.பா)

கீழே (iv)க்கு உட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.1750/- கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்.

iii. ஓய்வூதிய திட்டம், 1995 கீழ் வழங்கும் ஓய்வூதியத்திற்கு கூடுதலாக கருணை ஓய்வூதியம் அல்லது கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்.

iv. 01.04.2003 அன்று அல்லது அதற்கு பிறகு, பணியில் நியமிக்கப்பட்ட மற்றும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்கள்.

v. கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து ஒரு தனி மூலதன நிதி பங்களிப்பிலிருந்து வழங்கப்படும்.

vi. மாதாந்திர கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் வழங்க போதுமான தனி மூலதன நிதி உருவாக்கும் வரை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தங்களது பொது நிதியிலிருந்து வழங்குதல்.

vii. கருணை ஓய்வூதியம் செயல்படுத்துவதற்கு தேவையான ஒழுங்கு முறை வடிவமைக்கலாம்.

viii. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களிலிருந்து தீர்மானம் பெறப்பட வேண்டும்.

ix. அரசு நிதி ஒதுக்கப்படாது.

x. தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உரிய நடைமுறைப்படி பின்பற்ற வேண்டும்.

xi. கருணை ஓய்வூதியம் இந்த அரசாணை வெளியீட்டு தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

மேலும், இந்த அரசாணையில் இணைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் பின்பற்ற பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.

மேற்கூறிய, அரசாணைக்கிணங்க, கருணை ஓய்வூதியம் மற்றும் கருணை குடும்ப ஓய்வூதியம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 16.12.2016 முதல் அரசாணையின் படி நடைமுறைப்படுத்தப்பட்டது எனவும் மேலும், பார்வை(2)ல் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் வழங்கப்பட்டு வந்த கருணை ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.3500/-லிருந்து ரூ.4000/- ஆக உயர்த்தியும் கருணை குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.1750/-லிருந்து ரூ.2000/-ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. இந்த கருணை ஓய்வூதிய உயர்வு அரசாணை தேதி 28.11.2019 முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பல்வேறு ஓய்வுபெற்ற பணியாளர் நலசங்கங்கள் கருணை ஓய்வூதியத்தினையும் குடும்ப ஓய்வூதியத்தினையும் உயர்த்தி வழங்க கோரிக்கை வைத்துள்ளதாகவும். இது தவிர, ஓய்வு பெற்ற பணியாளர்கள் நல சங்கங்கள், ஓய்வு பெற்ற அரசு பணியாளர்கள் இறந்துபோனால் அவரது இறுதிகால சடங்கிற்கு ரூ.50,000/- குடும்ப பாதுகாப்பு நிதியாக வழங்கும் திட்டம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் அமுல்படுத்திட கேட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(3) ன் படி, அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்பு நிதிக்கு, ஓய்வூதியத்திலிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ.150/- பங்களிப்பு பிடித்தம் செய்து அவர்கள் இறந்தால் அவரது குடும்பத்திற்கு ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்படுகிறது எனவும் தற்போது, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 24 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 4700 ஓய்வூதியர்கள் மற்றும் 1500 குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.26.40 கோடி கருணை ஓய்வூதியம்

தொடர்ச்சி பக்கம் → 3

வழங்கப்பட்டு வருவதாகவும் மேற்கூறிய கருணை ஓய்வூதியம் வழங்க ரூ.370.00 கோடி நிதி மூலதனம் கணக்கிடப்பட்டுள்ளதாகவும், இது நாள் வரை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ரூ.188 கோடி சிறப்பு சேம நல நிதி மூலம் ஆயுள் காப்பீடு கழகத்தில் நிதி மூலதனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த மூலதனம் செலுத்துவதற்கு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு தங்கள் விற்பனை முதலில் ஒரு சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கருணை ஓய்வூதியத்தினை குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.4000/-லிருந்து ரூ.4500/- ஆக உயர்த்தியும், கருணை குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.2000/-லிருந்து ரூ.2250/- ஆக உயர்த்தியும் வழங்கும் பட்சத்தில் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3.30 கோடி கூடுதல் செலவாகும் எனவும், ஓய்வு பெற்ற பணியாளர்கள் நலன் கருத்தில் கொண்டு கருணை ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.4000/-லிருந்து ரூ.4500/-ஆக உயர்த்தியும், கருணை குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ஒன்றுக்கு ரூ.2000/-லிருந்து ரூ.2250/- ஆக உயர்த்தியும் அரசாணை வழங்க ஆவண செய்யுமாறு நிர்வாக இயக்குநரால் பார்வை 6 கண்ட கடிதத்தின் வழி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கருணை ஓய்வூதியதாரர்களுக்கு பார்வை-3ல் உள்ளவாறு அரசு ஊழியர்களுக்கு வழங்கும் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதிதிட்டம் போன்ற திட்டத்தினை செயல்படுத்த அரசின் ஆணை வேண்டப்படுவதாகவும், இத்திட்டத்தில் கருணை ஓய்வூதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/- பிடித்தம் செய்து ஒரு தனி நிதி மூலதனம் உருவாக்கி அதிலிருந்து கருணை ஓய்வூதியர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ.50,000/- குடும்ப பாதுகாப்பு நிதியாக வழங்க அரசாணை பெற்றுதர ஆவண செய்யுமாறு நிர்வாக இயக்குநரால் பார்வை 6 கண்ட கடிதத்தின் வழி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

இக்கருத்துருவினை ஆவண செய்யுமாறு வேண்டி பார்வை-7ல் காணும் இவ்வலுவலக கடித்த்தின் மூலமாக இணையத்தின் பிரேரணையை அரசுக்கு அனுப்பப்பட்டது.

பிரேரணை அரசால் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை-8ல் காணும் அரசு ஆணையின்படி, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் தற்போது பெற்றுவரும் கருணை ஓய்வூதியத்தை ரூ.4,000/- லிருந்து ரூ.4,500/- ஆக உயர்த்தியும், குடும்ப கருணை ஓய்வூதியத்தை ரூ.2,000/- லிருந்து ரூ.2,250/- ஆக உயர்த்தியும் வழங்க கோரும் கருத்துருவையும் மற்றும் இக்கருணை ஓய்வூதியத்தில் இருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.150/- வீதம் பிடித்தம் செய்து ஒரு தனி நிதி மூலதனம் ( Corpus fund) உருவாக்கி அதிலிருந்து கருணை ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பு அவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் 50,000 நிதி உதவி வழங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பார்வை-8ல் காணும் அரசாணையில் (இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) வழங்கப்பட்டுள்ள கருணை ஓய்வூதியத்தை ரூ.4,500/- ஆக உயர்த்தியும், குடும்ப கருணை ஓய்வூதியத்தை ரூ.2,250/- ஆக உயர்த்தியும் கருணை ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படும் போது அதற்காக பிடித்தம் செய்யப்படும் தொகையும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் திருத்தியமைக்கப்பட்ட கருணை ஓய்வூதியத்தை அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ள தகுதியுள்ள பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த ஆணையிடப்படுகிறது.
2. கருணை ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித்திட்டம், மற்றும் கருணை ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பு குடும்பத்தினர்களுக்கு ரூ.50,000/- நிதி உதவி வழங்க செயல்படுத்த அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதம்

(த.பி.பா)

ஒன்றிற்கு ரூ.150/- வீதம் பிடித்தம் செய்து ஒரு தனி நிதி மூலதனம் உருவாக்கி அந்நிதி மூலதனத்தை நிர்வகிப்பதற்கென்று கீழ்க்கண்ட

- தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில்
  -பொது மேலாளர் (நிதி)
  -பொது மேலாளர் (நிர்வாகம்)
  -இணையத் தலைவர்
  -இணையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள பணியாளர்கள் சங்கங்களைச் சார்ந்து 3 நபர்கள் (சங்கத்திற்கு தலா 1 நபர் வீதம்) ஆகியோரைக் கொண்டு அறங்காவலர் குழு / TRUSTEESHIP அமைத்திடவும்
- அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில்
  - பொது மேலாளர்
  - ஒன்றிய தலைவர்
  - உதவி பொது மேலாளர்(நிதி) / பொது மேலாளர் (நிதி)
  - அவ்வொன்றியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள பணியாளர்கள் சங்கங்களைச் சார்ந்து 3 நபர்கள் (சங்கத்திற்கு தலா 1 நபர் வீதம்) ஆகியோரைக் கொண்டு அறங்காவலர் குழு / TRUSTEESHIP இத்தனிமூலதனத்தை நிர்மாணிக்க உருவாக்கிடவும் ஆணையிடப்படுகிறது.

இவ்வரசாணையினை அனைத்து ஒன்றியத்திலும், இணையத்திலும் ஒரே சீராக அமல் படுத்தப்பட வேண்டும் என்ற காரணத்தால் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 10.07.2023 முதல் நடைமுறைப்படுத்த ஆணையிடப்படுகிறது.

இவ்வாணைகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது,

1. இப்பொருள் இணையம் (ம) அனைத்து ஒன்றியங்களின் எதிர்வரும் நிர்வாக குழுவில் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்
2. அனைத்து ஒன்றிய மற்றும் இணையத்தின் 2022-2024 ஆம் ஆண்டின் வரவு செலவுகளில் இச்செலவினத்திற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்
3. உரிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்

இணைப்பு: அரசாணை (நிலை) எண்:84,
நாள்:10.07.2023 , கால்நடை பராமரிப்பு பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(பா.உ.2) துறை

ஒம்/-மரு. சு. வினீத்
இயக்குநர்

**பெறுநர்**

1. நிர்வாக இயக்குநர்,
   தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,
   சென்னை-600 035.
2. பொது மேலாளர் ,
   அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்.
3. அனைத்து சரக துணைப்பதிவாளர் (பால்வளம்)கள்.
4. பொது மேலாளர் (நிதி),
   தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,
   சென்னை-600 035.
5. பொது மேலாளர் (நிர்வாகம்),
   தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,
   சென்னை-600 035.
6. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
   கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
   மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(பா.உ.2) துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 09.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31.7.23
இயக்குநருக்காக

31/7/23.